

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (3.02.2025) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் உத்தேசிக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் 2025 – 2026 ஆம் ஆண்டின் மானிய கோரிக்கையின் போது மேற்கொள்ளப்படவுள்ள புதிய பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அரசு முதன்மைச்செயலாளர் சா.விஜயராஜ் குமார், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை ஆணையர் வா.சம்பத், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அரசு சிறப்புச் செயலாளர் முனைவர் சீ.சுரேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளையொட்டி நேற்று முன்தினம் (03.02.2025) மாங்காடு காமாட்சி அம்மன் திருக்கோயிலில், நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் பால்வளம் மற்றும் காதித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்து கொண்டார்.

## தந்தை பெரியார் சிலையை அவமதித்தவர்களை

# குண்டர் சட்டத்தில் கைது செய்க!

### வைகோ அறிக்கை!



சென்னை, பிப். 5-

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தந்தை பெரியார் அவர்கள் மீது அவதூறுகளை அள்ளி வீசி இழித்தும் பழித்தும் பேசி வருகிற ஒரு கும்பல், அமைதி பூங்காவான தமிழ்நாட்டை கலவர பூமியாக மாற்ற சதித் திட்டங்களை அரங்கேற்றி வருகின்றது.

இதன் பின்னணியில் தான் இரவு 8 மணி அளவில் சென்னை ஜாபர்கான் பேட்டை பிள்ளையார் கோயில் தெருவில் கங்கை அம்மன் தெரு சந்திப்பில் தென் சென்னை மேற்கு மாவட்ட ம.தி.மு.க. சார்பில் நிறுவப்பட்ட பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் சிலை மீது ஏறி நின்று காலணியால் அடித்திருக்கிறார்கள். இச்செயல் கடும் கண்டனத்துக்குரியதாகும்.

உடனடியாக அந்தப் பகுதியில் உள்ள மறுமலர்ச்சி தி.மு.க. நிர்வாகிகள் பெரியார் சிலையை அவமதித்த நபரைப் பிடித்து காவல்துறையிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள்.

தந்தை பெரியார் சிலையை அவமதித்த நபர் மீது வழக்கு பதிவு செய்யக் கோரியும், இதன் பின்னணியில் உள்ள கும்பலை கைது செய்யக்கோரியும் தென்சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சைதை சுப்பிரமணி தலைமையில் கழகத் தோழர்கள் மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

காவல்துறையின் பொறுப்பில் இருக்கும் நபர்கள் மீது கடுமையான பிரிவுகளில் வழக்கு பதிவு செய்வதோடு, பெரியார் சிலையை அவமதித்த கும்பலை குண்டர் சட்டத்தின் கீழ் உடனடியாக சிறையில் அடைக்க வேண்டும்.

தந்தை பெரியார் அவர்களின் கோட்பாடுகளுக்கு எதிராக கருத்தியல் ரீதியாக விமர்சனங்களை முன் வைப்பது என்பது வேறு.

ஆனால் பெரியாரை இழிவு படுத்துவதை பொறுத்துக் கொள்ள முடியாது. எனவே தமிழ்நாட்டை கலவர பூமியாக மாற்றதுடிக்கும் கூட்டத்தின் சதி திட்டத்தை முறியடித்து தக்கப் பாடம் புகட்ட வேண்டும்.

இவ்வாறு வைகோ குறிப்பிட்டுள்ளார்.

## காங்கேயம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில்

# ரூ.83.50 இலட்சம் மதிப்பீட்டில் காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டும் பணி!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், பிப். 5 -

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி, நெடுஞ்சாலைத்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவுகள் திட்டத்தின் கீழ் ரூ.62.50 இலட்சம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.21.00 இலட்சம் என மொத்தம் ரூ.83.50 இலட்சம் மதிப்பீட்டில் 1470.67 ச.அடி பரப்பளவில் சட்டமன்ற உறுப்பினர் அறை, காத்திருப்போர் அறை, இ சேவை மையம் மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கூடிய காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டும் பணியை தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா தலைமையில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப் பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தர விட்டுள்ளார்கள். அந்த வகையில் காங்கேயம் நகராட்சி பகுதிகளில் இன்றைய தினம் காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டும் பணி துவக்கி வைக்கப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு/ பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு/ தொழிற் கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/- அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட சிறப்பான திட்டங்களை தமிழக மக்களுக்காக திராவிட மாடல் ஆட்சி நாயகர், நம் கழகத்தின் தலைவர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செந்தில்குமரன், உதவி செயற்பொறியளார் கனகராஜ், உதவி பொறியாளர் அமரமூர்த்தி, மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், நகர கழக செயலாளர்கள் வசந்தம் நா.சேமலையப்பன் காங்கேயம், சபரி எஸ்.முருகானந்தம் வெள்ளக்கோவில், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கே.சிவானந்தன் காங்கேயம் தெற்கு, சி.கருணை பிரகாஷ் காங்கேயம் வடக்கு, சிவ.செந்தில் குமார் குண்டம் கிழக்கு, கே.சந்திரசேகரன் வெள்ளக்கோவில், எஸ்.ஆர்.எஸ்.செல்வம் (எ) தமிழ் செல்வன் சென்னிமலை மேற்கு, சி.பிரபு சென்னிமலை கிழக்கு, பொதுக் குழு உறுப்பினர் கே.எஸ்.கார்த்திகேயன், நகர துணை செயலாளர் சுப்பு (எ) சுப்பிரமணியம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு கழக, கிளை கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## முதல்வர், துணை முதல்வர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகியோருக்கு நன்றி!

# புதிய வரலாறு படைத்த சாரணர் இயக்க பொன்விழா! முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி விழா!

### அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!



சென்னை, பிப். 5 -

புதிய வரலாறு படைத்த பாரத சாரணர் 75 ஆம் ஆண்டு பொன்விழா மற்றும் முத்தமிழ் கலைஞர் நூற்றாண்டு நிறைவுவிழா பெருந்திரளணி விழா தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோருக்கு நெஞ்சார்ந்த நன்றி என நிறுவனத் தலைவர் சா.அருணன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு : -

திருச்சி மாவட்டம் மனப்பாறை சிப்காட் வளாகத்தில் கடந்த மாதம் ஜனவரி 28ம் தேதி தொடங்கி பிப்ரவரி 2ம் தேதிவரை நடைபெற்றது. இதில் நான்கு உலக நாடுகளில் இருந்தும் இந்தியாவில் அனைத்து மாநிலங்களில் இருந்தும் சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாரண சாரணியைகள் பெருந்திரளணியாக கலந்து கொண்டு புதிய வரலாறு படைத்தனர். மேலும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடபெற்ற விழாவை துணை முதலமைச்சர் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான இளைஞர்களின் எழுச்சி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சாரணர் கொடியை ஏற்றிவைத்து விழாவை தொடங்கிவைத்து திறந்த வாகனத்தில் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். பின்பு மாணவர்களிடையே சிறப்புரை யாற்றினார்.

அதன் பின் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் சாரண சாரணியர்களுக்கு பயிறசிகள் பல விதமான போட்டிகள், அந்தந்த நாட்டின் மற்றும் மாநிலத்தின் கலை பண்பாட்டை நிலைநாட்டுகின்ற விதமாக கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு போட்டிகள் கட்டுரை, ஓவியம் என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிகழ்ச்சிகள் பேரணிகள் என அனைத்தும் பிரமிக்க வைப்பதாக இருந்த்து அந்நிய நாட்டினர் வெவ்வேறு மாநிலத்தவர்கள் வியந்து பாராட்டியதை மறுக்க மறக்க முடியாது. இந்த விழவிற்கு மகுடம் சூட்டும் விதாம இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வருகை வருகை மட்டும் பேரெழுச்சியுரையும் பாராட்டிற்கு உரியது. அதாவது பள்ளிக்கல்வித்துறையை தலைமையேற்று முன்னேற்றப் பாதைக்கு எடுத்துச் செல்லும் அன்பில் மகேஷ் அவர்களை எனக்கு குழந்தையில் இருந்தே தெரியும் அவருடை தந்தை அன்பில் பொய்யாமொழி அவர்கள் என் நெருங்கிய நண்பர் இன்று அவர் இல்லை. அவர் இல்லை என்றாலும் அவர் இடத்தில் இருந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன் பாராட்டுகிறேன் என்று உணர்ச்சி பொங்க பேசியது உண்மையாக அவர் எந்த அளவிற்கு நண்பர்கள் மீது பாசம் கொண்டவர் என்பதற்கு இதுவே சான்று இந்த உரையை கேட்கும்போது என் மெய்சிலிர்த்தது.

மேலும் பேசுகையில் இந்திய ஆட்சி பணி அலுவலர்கள், பெருந்திரளணி விழாவை சிறப்பாக நடத்த ஏதுவாக, 10 இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் தலைமையில் 389 பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள், 700 காவல்துறை அலுவலர்கள், 450 மருத்துவத் துறை அலுவலர்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட இதர துறை பணியாளர்கள் என்று மொத்தம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஒருங்கிணைந்து வெற்றிகரமாகவும், பாதுகாப்பான முறையிலும் இந்த விழாவை நடத்தி இருக்கிறார்கள்.

இதற்காக அர்ப்பணிப்போடு பணியாற்றிய அனைத்துத் துறை அலுவலர்களுக்கும், பாரத சாரண சாரணியர் இயக்கத்தைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என அனைவருக்கும் ஒரு மாநிலத்தின் முதலமைச்சரே நன்றி தெரிவித்துக் கொண்டது அவருடைய உயர்ந்த நற்பண்பிற்கு அத்தாட்சியாக அமைந்தது

சாரணர் இயக்க தலைமையகம் பயிற்சி வளாகம் இணைத்து கட்ட ரூ.10 கோடி ஒதுக்கப்படும் என அறிவித்த முதலைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

மேலும் இந்தியாவே வியக்கவைத்து தன்பக்கம் இழுக்க செய்த இந்த விழாவை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்த தமிழ்நாடு முதலைச்சர் முதலமைச்சர் மு.க.ஸ்டலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் மேலும் பள்ளிக் கல்வித்துறை செயலாளர் மதிப்புமிகு மதுமதி அவர்களுக்கும், பள்ளிக்கல்வித் துறையை சார்ந்த இயக்குநர்கள் முனைவர் கண்ணப்பன், முனைவர், நாகராஜ முருகன், முனைவர் பூ.ஆ.நரேஷ், சாரணர் ஆணையர் முனைவர் அறிவொளி, உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் பாராட்டி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சா.அருணன் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்

### பிப்ரவரி 5 (2021)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரிடம் அணுக்கமாக இருந்து அரிய முறையில் தமிழ் எழுத்துப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாளில், அதன் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற 150 பேரில் ஒருவரும் – தன் இறுதி மூச்சு வரை கழகத்தின் உறுதியான உடன்பிறப்புகளில் ஒருவராக விளங்கியவர்.

71 ஆண்டுகளுக்கும் மேலாக முழுநேரமும் பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு, நல்ல தமிழ்ச் சொற்களை நடைமுறைக்கு கொண்டு வந்த தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளராக விளங்கியதுடன், கழக ஏடுகளான ‘மாலைமணி’, ‘நம்நாடு’, ‘கழகக்குரல்’ உள்ளிட்ட பல்வேறு ஏடுகளில் பணியாற்றியதுடன், முதலில் ‘கவிக்கொண்டல்’ என்றும் பின்னர், ‘மீண்டும் கவிக்கொண்டல்’ என்றும் தொடர்ந்து 32 ஆண்டுகள் அவ்விதழை நடத்தியவர். 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

மவுண்ட்ரோடு போஸ்ட் ஆபீஸ் என்ற பெயரை ‘அண்ணாசாலை அஞ்சல் அலுவலகம்’ என்று பெயர் மாற்றிட காரணமாக இருந்தவர்.

2018ஆம் ஆண்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தலைமைக் கழகத்தின் சார்பில் “பேராசிரியர் விருது” வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி பொற்செல்வி இளமுருகு

### பிப்ரவரி 5 (2013)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவரும் – தலைவர் கலைஞர் அவர்களிடம் நீண்டகாலமாக அன்பும் பாசமும் காட்டி, தலைவரின் குடும்பத்தாரோடு இரண்டறக் கலந்துவிட்டவரும் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் இவர்.

தி.மு.க. மகளிர் அணி துவக்கப்பட்ட காலத்திலிருந்தே மகளிர் அணியில் இடம் பெற்றதோடு, மாநில மகளிர் அணி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். 1987ஆம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் “கலைஞர் விருதினை” அளித்து சிறப்பு செய்தார்.

“1957இல் நான் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம், குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டபோது, திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்கள் தனது கணவரோடு அரும்பாடுபட்டு, கழகப் பணியாற்றி, என்னுடைய தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைத்தவர் என்பதை நான் என்றைக்கும் மறந்திட முடியாது” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**